AAMU PUBLICATION TENKASI

384 பக்கங்கள்



புதிய பாடத்திட்டம்

# பொதுத்தமிழ்

பாகம் - 2

அலகு - 3 எழுதும் திறன்
அலகு - 4 கலைச் சொற்கள்
அலகு - 5 வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன்
அலகு - 6 எளிய மொழி பெயர்ப்பு

# TNPSC

Group - II, IIA & IV

TAF IAS ACADEMY
TAF
THINK YOU CAN..

10% OFF
DISCOUNT

ORDER NOW

https://www.tafiasacdemy.in/shop/

2025
புதிய பாடத்திட்டம்

புத்தக தேவைக்கு :
COURIER & தபாலில் பெற
9566974903

AAMU PUBLICATION
TENKASI

புதிய பாடத்திட்டம்

# பொதுத்தமிழ்

பாகம் - 2

அலகு - 3 எழுதும் திறன்

அலகு - 5 வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன்

அலகு - 4 கலைச் சொற்கள்

அலகு - 6 எளிய மொழி பெயர்ப்பு

# TNPSC

## Group - II, IIA & IV









"மனமது செம்மையானால்
மந்திரம் செபிக்க வேண்டாம்"
- அகத்தியர்

என்றும் மாணவர் நலனில்...

# TAF IAS ACADEMY

தமிழகம் முழுவதும் 60+ கிளைகள் / 16 ஆண்டுகளில் 15985+ பேருக்கு அரசுப்பணி..



J.ஆகாச மூர்த்தி M.Com., LLB.,
Founder, TAF IAS ACADEMY

# TNPSC

# GROUP – II, IIA & IV

# பொதுத்தமிழ் (புதிய பாடத்திட்டம்)

## பாகம் – II (அலகு - III, IV, V & VI)




"மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை
மரபுவழிப் பட்ட சொல்லின் ஆன
மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்"

**PUBLISHED BY**

16 ஆண்டுகளில் 15985+பேருக்கு அரசுப்பணி / தமிழகம் முழுவதும் 60 கிளைகள்

TAF IAS ACADEMY

Head Office : TENKASI 9597587300 TAF IAS ACADEMY

Coaching for : UPSC - TNPSC - TET - TRB - POLICE - SI - BANKING - RAILWAY

தலைமையகம் : தென்காசி
95975 87300
tafiasacademyho@gmail.com
www.tafiasacademy.in
TAF IAS ACADEMY / TAF POLICE 2020
TNPSC-LIFE(TAF)

திரு. J.ஆகாச மூர்த்தி M.Com.,LLB., நிறுவனர், TAF IAS ACADEMY
திரு. M.மாரியப்பன் M.Com., Ph.D., நிர்வாக இயக்குநர், TAF IAS ACADEMY

புத்தக தேவைக்கு (கூரியர் & தபால்) பெற...
செல் : 95669 74903

## பதிப்புரிமை

ஆசிரியரின் எழுத்து மூலமான அனுமதியின்றி இப்புத்தகத்தை மறுபதிப்பு செய்யவோ வேறு மொழிகளில் மொழி பெயர்க்கவோ,அச்சடிக்கவோ, ஒளிநகல் எடுக்கும் கடைகளில் படி எடுத்து விற்பனை செய்யவோ கூடாது. அவ்வாறு செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.



| | | |
|---|---|---|
| தலைப்பு | : | பொதுத்தமிழ் ( பாகம் – II ) |
| ஆசிரியர் | : | TAF தமிழ்த்துறை |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு, மார்ச் 2025 |
| பக்கங்கள் | : | 384 பக்கங்கள் |
| விலை | : | ரூ.380 /– |

இப்புத்தக உருவாக்கத்திற்கு உதவி செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றி...!

AAMU PUBLICATION
TAF BOOKS
Cuddalore

MOBILE 95669 74903, 89400 77746
WEBSITE www.tafiasacademy.com
E-MAIL tsiacademyho@gmail.com
FACEBOOK TNPSC – LIFE (TAF)
YOUTUBE : TAF IAS ACADEMY
TELEGRAM : TAF IAS ACADEMY

259/81 C, KOOLAKADAI BAZAR STREET,
TENKASI,Tirunelveli, Tamil Nadu, 627811

# பாடத்திட்டம்

## பகுதி இ: பொதுத்தமிழ் (பத்தாம் வகுப்புத் தரம் - 100 கேள்விகள்)

## தமிழ் தகுதித்தேர்வு மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

### அலகு I : இலக்கணம் (25 வினாக்கள்)

எழுத்து: பிரித்து எழுதுதல் - சேர்த்து எழுதுதல் - சந்திப்பிழை - குறில், நெடில் வேறுபாடு - லகர, ளகர, ழகர வேறுபாடு - னகர, ணகர வேறுபாடு - ரகர, றகர வேறுபாடு - இனவெழுத்துகள் அறிதல் - சுட்டு எழுத்துகள் - வினா எழுத்துகள் - ஒருமைப் பன்மை அறிதல்.

சொல்: வேர்ச்சொல் அறிதல் - வேர்ச்சொல்லில் இருந்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், பெயரெச்சம் வகை அறிதல் - அயற்சொல் - தமிழ்ச்சொல், எதிர்ச்சொல் - வினைச்சொல் - எழுத்துப் பிழை, ஒற்றுப்பிழை அறிதல் - இரண்டு வினைச் சொற்களின் வேறுபாடு அறிதல்.

### அலகு II : சொல்லகராதி (15 வினாக்கள்)

(i) எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல், ஓரெழுத்து ஒரு மொழி, உரிய பொருளைக் கண்டறிதல் - ஒருபொருள் தரும் பல சொற்கள், பொருந்தா சொல்லைக் கண்டறிதல், அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல்; ஒருபொருள் பன்மொழி - இருபொருள் குறிக்கும் சொற்கள் - பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு - சொல்லும் பொருளும் அறிதல் - ஒரு சொல்லிற்கு இணையான வேறு சொல் அறிதல்.

(ii) கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் - (எ.கா.) பள்ளிக்குச் சென்று கல்வி பயிலுதல் சிறப்பு (பயிலுதல், எழுதுதல்) - வானில் முகில் தோன்றினால் மழை பொழியும் (முகில், நட்சத்திரம்); பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல் - (எ.கா.) ஊடகம் - தகவல் தொடர்புச் சாதனம் (செய்தி, தகவல் தொடர்புச் சாதனம்) - சமூகம் - மக்கள் குழு (மக்கள் குழு, கூட்டம்); ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக - (எ.கா.) புதுச்சேரி - புதுவை, மன்னார்குடி - மன்னை, மயிலாப்பூர் - மயிலை; பிழை திருத்துக. (எ.கா.) ஒரு - ஓர்; பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல் - (எ.கா.) வெத்தில - வெற்றிலை, நாக்காலி - நாற்காலி.

(iii) பேச்சு வழக்குத் தொடர்களிலுள்ள பிழை திருத்தம் - (எ.கா.) நேத்து மழ பேஞ்சுது - நேற்று மழை பெய்தது; சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்குதல்: மற்றும் அல்லது, ஆல், பிறகு, வரை, இதுவுமல்ல, இருப்பினும், எனினும், இதனால்; அடைப்புக்குள் உள்ளச் சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்த்தல் - (எனவே, ஏனெனில், ஆகையால், அதுபோல, அனால், வரை, பின்பு) - (எ.கா.) நான் காட்டிற்குச் சென்றேன். அதனால் புலியைப் பார்த்தேன் - மாலைநேரம் முடியும் வரை விளையாடுவேன். தேர்வு முடிந்த பின்பு சுற்றுலா செல்லலாம்; பொருள் தரும் ஓர் எழுத்து - (எ.கா). ஆ - பசு, ஈ-கொடு, தை-மாதம், தீ-நெருப்பு; பல பொருள் தரும் ஒரு சொல்லைக் கூறுக - (எ.கா.) கமலம், கஞ்சம், முளரி, பங்கயம், இச்சொற்கள் தாமரையைக் குறிக்கும்.

**அலகு III : எழுதும் திறன் (15 வினாக்கள்)**

(i) **சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் அமைத்தல் - தொடர் வகைகள் - செய்வினை, செயப்பாட்டு வினை - தன்வினை, பிறவினை - ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல்.**

(ii) **மரபுத் தமிழ்: திணை மரபு - உயர்திணை: அம்மா வந்தது - அம்மா வந்தாள்; அஃறிணை: மாடுகள் நனைந்தது - மாடுகள் நனைந்தன: பால் மரபு: ஆண்பால்: அவன் வந்தது - அவன் வந்தான்; பெண்பால்: அவள் வந்தது - அவள் வந்தாள்; பலர் பால்: அவர்கள் வந்தார்கள் - அவர்கள் வந்தனர்; ஒன்றன் பால்: அது வந்தன -அது வந்தது; பலவின் பால்: பறவைகள் பறந்தனர் - பறவைகள் பறந்தன; காலம்: நேற்று மழை பெய்யும் - நேற்று மழை பெய்தது; நேற்று வருவேன் - நேற்று வந்தேன்; இளமைப் பெயர்: பசு - கன்று; ஆடு - குட்டி; ஒலிமரபு: நாய் கத்தியது - நாய் குரைத்தது; வினைமரபு: கூடைமுடை, சோறு உண்; தொகை மரபு: மக்கள் கூட்டம் - ஆட்டு மந்தை; நிறுத்தல் குறியீடுகள்: கால்புள்ளி, அரைப் புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப் புள்ளி, வியப்புக் குறி, வினாக்குறி அமையும் இடங்கள்.**

**அலகு IV : கலைச் சொற்கள் (10 வினாக்கள்)**

**பல்துறை சார்ந்த கலைச் சொற்களை அதாவது அறிவியல், கல்வி, மருத்துவம், மேலாண்மை, சட்டம், புவியியல், தொழில்நுட்பம், ஊடகம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்துறை சார்ந்த கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொற்களை அறிந்திருக்க வேண்டும். (உதாரணம்: தேடு பொறி -** Search Engine**, வலசை -** Migration**, ஒவ்வாமை -** Allergy**, மரபணு -** Gene**, கடல் மைல் -** Nautical Mile**)**

**அலகு V : வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன் (15 வினாக்கள்)**

**கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் - செய்தித்தாள் - தலையங்கம் - முகப்புச் செய்திகள் - அரசு சார்ந்த செய்திகள் - கட்டுரைகள் - இவற்றை வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன் - உவமைத் தொடரின் பொருளறிதல் - மரபுத் தொடரின் பொருளறிதல் - பழமொழிகள் பொருளறிதல் - ஆவண உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளும் திறன்.**

**அலகு VI : எளிய மொழி பெயர்ப்பு (5 வினாக்கள்)**

**ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அறிதல் வேண்டும் - பயன்பாட்டில் உள்ள ஆங்கிலச் சொற்களை மொழிபெயர்த்தல் வேண்டும் (சான்று:** Pendrive, Printer, Computer, Keyboard**) - ஆவணங்களின் தலைப்பு - கோப்புகள் - கடிதங்கள் - மனுக்கள் - மொழிபெயர்ப்பு புரிந்து கொள்ளுதல்.**

## அலகு VII : இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும் (15 வினாக்கள்)

திருக்குறள் தொடர்பான செய்திகள் (இருபது அதிகாரங்கள் மட்டும்) ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, ஊக்கமுடைமை, விருந்தோம்பல், அறன் வலியுறுத்தல், ஈகை, பெரியாரைத் துணைக்கோடல், வினை செயல்வகை, அவையஞ்சாமை, கண்ணோட்டம், அன்புடைமை, கல்வி, நடுநிலைமை, கூடா ஒழுக்கம், கல்லாமை, செங்கோன்மை, பண்புடைமை, நட்பாராய்தல், புறங்கூறாமை, அருளுடைமை - மேற்கோள்கள் - அறநூல் தொடர்பான செய்திகள் (நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, முதுமொழிக் காஞ்சி, திரிகடுகம், இன்னாநாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, அவ்வையார் பாடல்கள்) - தமிழின் தொன்மை, சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள் - உ.வே.சாமிநாத ஐயர், தெ.பொ.மீனாட்சி சுந்தரம், சி.இலக்குவனார் தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள் - தேவநேய பாவாணர், அகரமுதலி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஜி.யு.போப், வீரமாமுனிவர் தமிழ்த் தொண்டு தொடர்பான செய்திகள் - தமிழ்ச் சான்றோர் பற்றிய செய்திகள்: பாவேந்தர், டி.கே.சிதம்பரனாதர், தவத்திரு குன்றக்குடி அடிகளார், கண்ணதாசன், காயிதே மில்லத், தாரா பாரதி, வேலுநாச்சியார், பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், முடியரசன், தமிழ் ஒளி, உருத்திரங்கண்ணனார், கி.வா.ஜகந்நாதர், நாமக்கல் கவிஞர்.

(குறிப்பு : அலகு **VII**-க்கான பாடத்திட்டம் பத்தாம் வகுப்பு வரையிலான **(Upto SSLC Standard)** பாடப் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டது.)

**போட்டித்தேர்வு மாணவர்களின் கவனத்திற்கு,**

- **TNPSC** வெளியிட்டுள்ள புதியப் பாடத்திட்டத்தில் பொதுத்தமிழ் பகுதி மொத்தம் **VII** அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- இதில் அலகு **I & II** ஆகிய தலைப்புகள் பாகம் - **I** ஆகவும், அலகு **III, IV, V & VI** ஆகிய தலைப்புகள் பாகம் - **II** ஆகவும், **VII** ஆவது அலகு பாகம் - **III** ஆகவும் மொத்தம் 3 புத்தகங்கள் வெளியிடப்படும்.

குறள் : 400
கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

பொருள்:
ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும்.
கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள்
(அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.



# பொருளடக்கம்


| அலகு எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| **அலகு III : எழுதும் திறன்** | | |
| 3. | 3.1 சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் அமைத்தல் | 01 - 11 |
| | 3.2 தொடர் வகைகள் | 12 - 45 |
| | 3.3 செய்வினை, செயப்பாட்டு வினை | 46 - 49 |
| | 3.4 தன்வினை, பிறவினை | 50 - 54 |
| | 3.5 ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல் | 55 - 72 |
| | 3.6 மரபுத் தமிழ்: திணை மரபு, பால் மரபு, காலம், இளமைப் பெயர்: வினைமரபு, தொகை மரபு | 73 - 97 |
| | 3.7 நிறுத்தல் குறியீடுகள்: கால்புள்ளி, அரைப் புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப் புள்ளி, வியப்புக் குறி, வினாக்குறி அமையும் இடங்கள் | 98 - 111 |
| **அலகு IV : கலைச் சொற்கள்** | | |
| 4. | 4.1 பல்துறை சார்ந்த கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொற்கள் | 112 - 143 |
| **அலகு V : வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன்** | | |
| 5. | 5.1 கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் - செய்தித்தாள் - தலையங்கம் - முகப்புச் செய்திகள் - அரசு சார்ந்த செய்திகள் - கட்டுரைகள் - இவற்றை வாசித்தல், புரிந்து கொள்ளும் திறன் | 144 - 189 |
| | 5.2 உவமைத் தொடரின் பொருளறிதல் | 190 - 204 |
| | 5.3 மரபுத் தொடரின் பொருளறிதல் | 205 - 225 |
| | 5.4 பழமொழிகள் பொருளறிதல் | 226 - 287 |
| | 5.5 ஆவண உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளும் திறன் | 288 - 294 |
| **அலகு VI : எளிய மொழி பெயர்ப்பு** | | |
| 6. | 6.1 ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அறிதல் | 295 - 311 |
| | 6.2 பயன்பாட்டில் உள்ள ஆங்கிலச் சொற்களை மொழிபெயர்த்தல் | 312 - 341 |
| | 6.3 ஆவணங்களின் தலைப்பு - கோப்புகள் - கடிதங்கள் - மனுக்கள் - மொழிபெயர்ப்பு புரிந்து கொள்ளுதல் | 342 - 377 |

# எழுதும் திறன்

## 3.1 சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் அமைத்தல்

- எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் ஆகியவற்றை உணர்ந்து, ஒரு சொற்றொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி, இலக்கணப்பிழையின்றி அமைந்த, சரியான சொற்றொடரைக் கண்டறிதலே இந்தப்பகுதியில் கேட்கப்படும் கேள்விகள். அரிதாக இலக்கியச் சொற்றொடர்களும் இடம்பெறுவதுண்டு.
- இலக்கியச் சொற்றொடர்கள் இடம்பெறும்போது அதில் உள்ளவாறே அமைக்க வேண்டும்.

**சொல்**

- ஓர் எழுத்து தனித்தோ, ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் இணைந்தோ பொருள் தந்தால் அது சொல்லாகும்.

**சொற்றொடர்**

- இரண்டு (அ) இரண்டிற்கு மேற்பட்ட சொற்கள் சேர்ந்து ஒரு முழுமையான கருத்தைத் தெரிவிப்பது வாக்கியம் அல்லது சொற்றொடர் எனப்படும்.

**அமைப்பு**

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| யார் (அ) எது<br>என்ற கேள்விக்கு வரும் பதில் | யாரை (அ) எதை (அ) எவற்றை<br>என்ற கேள்விக்கு வரும் பதில் | ஒரு வாக்கியத்தை<br>முடிக்கும் சொல் |

**எழுவாய் (தோன்றும் இடம் என்பது பொருள்)**

- எழுவாய் என்பது பெயர்ச்சொல்
- எழுவாய் பெரும்பாலும் தொடரின் முதலில் வரும். இருப்பினும் இடம் மாறி வருதலும் உண்டு.
  எ.கா : சுதா பழம் உண்டாள்
- இவ்வாக்கியத்தில் சுதா என்பது எழுவாய் ஆகும்.
- யார் பழம் உண்டாள் என்ற கேள்விக்கு விடையாக வருவது சுதா என்பதாகும்.

TAF IAS ACADEMY

**செயப்படுபொருள்**

- எ.கா : திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.
- இவ்வாக்கியத்தில் எதை இயற்றினார் என்பதற்குப் பதிலாகக் கிடைக்கும் திருக்குறள் என்பது செயப்படுபொருள் ஆகும்.

**பயனிலை**

- பயன் நிலைத்து இருக்கும் இடம்.
- பெரும்பாலும் தொடரின் இறுதியில் வரும்.
- எ.கா : அவன் நாளை வருவான்.
  இவ்வாக்கியத்தில் வருவான் என்பது பயனிலை ஆகும். இவ்வாக்கியத்தில் வருவான் என்ற வார்த்தை வந்தால் தான் வாக்கியம் முடிவு பெறும்.
  (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் குறித்து மேலும் 3.2-வில் கொடுக்கப்பட்டுள்ளது)

**எடுத்துக்காட்டுகள்**

| முறை மாறியுள்ள சொற்கள் | ஒழுங்குபடுத்திய சொற்றொடர்கள் |
|---|---|
| தன்னை நேசி பிறரைப்போல் | தன்னைப்போல் பிறரை நேசி |
| நண்பனை நல்ல ஆபத்தில் அறியலாம் | நல்ல நண்பனை ஆபத்தில் அறியலாம் |
| வழுவாமல் நிற்க நீதிநெறி வேண்டும் | நீதிநெறி வழுவாமல் நிற்க வேண்டும் |
| ஊரே யாவரும் யாதும் கேளிர் | யாதும் ஊரே யாவரும் கேளிர் |
| ஏது வசமாகா இசையால் இதயம்? | இசையால் வசமாகா இதயம் ஏது? |
| நகைசெய் இனம்பெழீ இத்தாய்துகள் தன்மை | நகைசெய் தன்மை இனம்பெழீ இத்தாய்துகள் |
| சிறப்பின் இமயவர்வியப்ப எள்ளுறு | எள்ளுறு சிறப்பின் இமயவர்வியப்ப |
| மீன் உபகாரத்தான் தேனோடு ஒருங்கு | ஒருங்கு தேனோடு மீன் உபகாரத்தான் |
| திருநாவுக்கரசர் அதுமொழிய அவர் திருமறையோர் | திருமறையோர் அதுமொழிய திருநாவுக்கரசர் அவர் |
| கனியே என் முத்திக் முத்தமிழே | முத்திக் கனியே என் முத்தமிழே |
| படுதிறை பல்யானை மன்னீர் தந்துய்ம்மின் | பல்யானை மன்னீர் படுதிறை தந்துய்ம்மின் |
| திருமேனி புறவின் சேர்ந்த நிறைதன் | சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி |
| மன்னர் மருப்பூசி மறங்கனல் வேல் யாக | மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர் |
| வேங்கை போற்றியே நடந்தது நன்று நன்றெனப் | நன்று நன்றெனப் போற்றியே நடந்தது வேங்கை |
| பெறுத்தலும் நிலை நீங்கலா நீக்கலும் | நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா |
| விடைபெற்று அண்ணனிடம் சென்றான் விதுரன் | அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான் |
| சதைப்புண்டு தவிப்பெய்தி திருமேனி தன்னரிய | தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்தி |
| விடுநனி மெய்உயிர் அனையானும் கடிதென்றான் | விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும் |
| குடியெல்லோம் அஞ்சோம் நமனை நாமார்க்கும் | நாமார்க்கும் குடியெல்லோம் நமனை அஞ்சோம் |
| புயல்பொழி பணைதரு பதிதொறு தருமணி | பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு |
| நீள்வயல்சூழ் மீன்நோக்கும் கோட்டமா வித்துவக் | மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட்டமா |
| தந்தைஎவ நானிது நல்லதாய் செய | நல்லதாய் தந்தைஎவ நானிது செய |
| தொட்டிவண் இன்று உயில்செகு நெறியினில் | இன்று தொட்டிவண் நெறியினில் உயில்செகு |
| கண்ணியாள் நுதல்விழி தேய்ந்த நாண் மதிக் | தேய்ந்த நாண் மதிக் கண்ணியாள் நுதல்விழி |
| ஐவர்கள் இனிநாம்ஓர் அன்புள உளரானோம் | அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானோம் |
| அடைக்கும்தாழ் உண்டோ ஆர்வலர் அன்பிற்கும் | அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர் |
| வெயில்போல என்பிலதனைக் காயுமே | என்பிலதனை வெயில்போலக் காயுமே |
| பயனுடையார் புரிந்த நன்றி நயனொடு | நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் |
| மாய்வது மண்புக்கு மன் | மண்புக்கு மாய்வது மன் |
| பாற் பகலும் பட்டன் றிருள் | பகலும் பாற்பட்டன் றிருள் |
| ஊற்றுக்கோல் அற்றே உடையுழி இழுக்கல் | இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே |
| தழீஇயது ஒட்பம் உலகம் மலர்தலும் | உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும் |
| வருவதோர் அதிர நோய் | அதிர வருவதோர் நோய் |
| சீர்மை செறிவறிந்து பயக்கும் | செறிவறிந்து சீர்மை பயக்கும் |
| யாகாவர் நாகாக்க காவாக்கால் ஆயினும் | யாகாவர் ஆயினும் நாகாக்க காவாக்கால் |
| பிறப்பு குன்ற ஒழுக்கம் கெடும் | பிறப்பொழுக்கங் குன்றக் கெடும் |
| ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர் | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |

## 3.2 தொடர் வகைகள்

- ஒரு சொற்றொடரைக் கொடுத்து அது எவ்வகை வாக்கியம் எனக் கண்டுபிடி என்ற வகையில் வினாக்கள் அமையும்.
- இந்தப் பகுதியில் விடை அளிப்பதற்கு நாம் தொடர் இலக்கணத்தில் உள்ள வாக்கியத் தொடர்கள் (சொற்றொடர் வகைகள்) பற்றித் தெளிவாக அறிந்திருக்க வேண்டும்.

### சொற்றொடர் (அ) வாக்கியம்

- சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது **சொற்றொடர் (அ) வாக்கியம்** ஆகும்.
- வாக்கியம் குறித்து அறிந்து கொள்ள (அ) வாக்கியம் அமைக்க **எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்** குறித்து அறிந்திருத்தல் அவசியம்.
- ஒரு தொடர் (அ) வாக்கியத்தில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச உறுப்பு – **எழுவாய் (ம) பயனிலை**

**எழுவாய் (தோன்றும் இடம்)**

- ஒரு சொற்றொடர் எழுவதற்குக் காரணமாய் அமைவது – எழுவாய்.
- இது ஒரு பெயர்ச்சொல்
- பெரும்பாலும் தொடரின் முதலில் வரும்
- பயனிலைச் சொல்லுடன் எது? யார்? எவை? என்பன போன்ற வினாவைத் தொடுக்கும்போது விடையாகக் கிடைப்பது.
  (எ.கா) – கண்ணன் வந்தான் – (கண்ணன் – எழுவாய்)

**பயனிலை**

- பயன் நிலைத்து இருக்கும் இடம்
- ஒரு தொடரை முழுமை பெறச் செய்யும் சொல்லே பயனிலை
- பெரும்பாலும் வினைச்சொல்லாக இருக்கும்.
- பெரும்பாலும் தொடரின் இறுதியில் வரும்
  (எ.கா) – மாடு வந்தது (வந்தது – பயனிலை)
- பயனிலை **மூன்று** வகையில் வரும்
  1. வினாப் பயனிலை – அவன் யார்?
  2. பெயர்ப் பயனிலை – அவர் மருத்துவர்.
  3. வினைப் பயனிலை – குமரன் எழுதினான்.

**செயப்படுபொருள் (பயனிலையை விளக்க வருவது)**

- ஒரு சொற்றொடரில் யாரை?, எதை? அல்லது எவற்றை? என்பவற்றிற்கு விடையாக அமையும் சொல் செயப்படுபொருள் 'கண்ணன் பந்தை அடித்தான்' – இத்தொடரில் கண்ணன் எதை அடித்தான்? என்ற கேள்விக்கு விடையாக வரும் பந்து (பந்தை) என்பதே செயப்படுபொருள்

**வாக்கியத்தின் வகைகள்**

| | |
|---|---|
| 1. செய்தி வாக்கியம்<br>2. வினா வாக்கியம்<br>3. உணர்ச்சி வாக்கியம்<br>4. கட்டளை வாக்கியம் | கருத்து வகை வாக்கியங்கள் |
| 5. தனி வாக்கியம்<br>6. தொடர் வாக்கியம்<br>7. கலவை வாக்கியம் | அமைப்பு வகை வாக்கியங்கள் |
| 8. உடன்பாட்டு வாக்கியம்<br>9. எதிர்மறை வாக்கியம்<br>10. தன்வினை வாக்கியம்<br>11. பிறவினை வாக்கியம்<br>12. செய்வினை வாக்கியம்<br>13. செயப்பாட்டு வினை வாக்கியம் | வினா வகை வாக்கியங்கள் |

**சொற்றொடர் வகைகள்**

**I. செய்தி வாக்கியம்**

- ஒரு கருத்தினை செய்தியாகத் தெரிவிப்பது செய்தித் தொடர் எனப்படும்.
- கூற வந்த செய்தியைத் தெளிவாகத் தெரிவிப்பது.
- எ.கா.
  - திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.
  - பரிதிமாற்கலைஞர் மதுரைக்கு அருகே உள்ள விளாச்சேரியில் பிறந்தார்.
  - என் அண்ணன் நாளை வருவான்.

**2. வினா வாக்கியம்**

- வினாப் பொருளை  தரும் வாக்கியம்.
- ஒருவரிடம் ஒன்றை வினவுவதாக அமையும் வாக்கியம்.
- எ.கா.
  - எங்கே செல்கிறாய்?
  - உள்ளே பேசிக் கொண்டிருப்பவர் யார்?
  - எழில் என்ன சாப்பிட்டாய்?
  - நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை?

**3. உணர்ச்சி வாக்கியம்**

- மகிழ்ச்சி, வியப்பு, துன்பம் முதலிய உணர்ச்சிகள் வெளிப்படுமாறு அமையும் வாக்கியம்.
- எ.கா.
  - அடேயப்பா! எவ்வளவு பெரிய ஏரி.
  - எவ்வளவு உயரமான மரம்.
  - என்னே! திருக்குறளின் மாண்பு.

# 3.4 தன்வினை, பிறவினை

✶ இந்தப் பகுதியில் ஒரு வாக்கியத்தைக் கொடுத்து அது தன்வினை வாக்கியமா? பிறவினை வாக்கியமா? செய்வினை வாக்கியமா? செயப்பாட்டு வினை வாக்கியமா? என்ற வகையில் விடையளிக்குமாறு வினாக்கள் அமைகிறது.

| தன்வினை | பிறவினை |
|---|---|
| ✶ எழுவாய் ஒரு செயலைத் **தானே செய்தல்.**<br>✶ எழுவாய் ஒரு வினையைச் செய்தல்.<br>✶ வினையின் பயன் எழுவாயைச் சேரும்.<br><br>✶ எ.கா.<br>புரட்சிக்கொடி திருக்குறள் கற்றாள்<br>அப்துல் நேற்று வந்தான்.<br>விமல் உண்டான்<br>பந்து உருண்டது.<br>தமிழழகன் கல்வி கற்றான் | ✶ எழுவாய் ஒரு செயலை பிறரால் செய்விப்பது (அ) பிறருக்காக செய்வது.<br>✶ வினையின் பயன் பிறிதொருவரை (அ) பிறிதொன்றைச் சாரும்.<br>✶ பித்து, வித்து எனும் சொற்கள் சேர்ந்து வரும்.<br>✶ எ.கா.<br>புரட்சிக்கொடி திருக்குறள் கற்பித்தாள்.<br>அப்துல் நேற்று புத்தகங்களை வருவித்தான்.<br>விமல் உண்பித்தான்<br>பந்து உருட்ட வைத்தான்.<br>தமிழழகன் கல்வி கற்பித்தான் |

**கீழ்வரும் முறைகளில் தன்வினையானது பிறவினையாக மாறும் முறை .**

**பிறவினை விகுதிகள்**

✶ வி, பி, கு, சு, டு, து, பு, து ஆகிய விகுதிகளில் ஒன்று, சேர்ந்து வருவதும் உண்டு.
**எ.கா.**
- நட – நடப்பி, நடப்பித்தான்
- செய் – செய்வி, செய்வித்தான்
- வா – வருவி, வருவித்தான்

✶ செய், வை, பண்ணு போன்ற துணை வினைகளை இணைத்தும் உருவாக்கப்படுகின்றன.
**எ.கா.**
- விழச் செய்தான்.
- வாழச் செய்தான்.
- உண்ண வைத்தான்.
- படுக்க வைத்தான்.
- எழு தானம் பண்ணுவித்தான்.
- சமையல் பண்ணுவித்தான்.

## 3.5 ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல்

✶ சொற்றொடர்கள் நீளமாக இருக்கும் போது ஒருமை பன்மை பிழை ஏற்பட வாய்ப்புண்டு.

✶ ஒரு பொருளை மட்டும் குறிப்பது ஒருமை, ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களைக் குறிப்பது பன்மை.

✶ ஒருமை என்பது ஒன்றை மட்டும் குறிப்பது. ஒருமையில் தொடங்கும் ஒரு தொடரின் முடிவு ஒருமையில் தான் முடிய வேண்டும்.

**எ.கா :** மரம் சாய்ந்தது, அவன் வந்தான்

✶ ஒரு வாக்கியத்தில் எழுவாய் பன்மை எனில் பயனிலையும் பன்மையில் வரும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

**எ.கா :** மரங்கள் சாய்ந்தன, அவர்கள் வந்தார்கள்.

✶ ஒருமை பன்மை பிழைகளை நீக்க வாக்கியங்களில் உள்ள எழுவாய்க்கு ஏற்ற பயனிலைகள் உள்ளனவா எனக் காணவேண்டும்.

| தன்மைப் பெயர் | | முன்னிலைப் பெயர் | | படர்க்கைப் பெயர் | |
|---|---|---|---|---|---|
| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
| யான்<br>நான்<br>என் | யாம், யாங்கள்<br>நாம், நாங்கள்<br>எம், எங்கள் | நீ | நீர், நீவீர் நீங்கள் | அவன், அவள்<br>தம்பி<br>அது<br>நரி | அவர்கள்<br>தம்பிமார்<br>அவை<br>நரிகள் |

**படர்க்கை விகுதிகள்**

✶ படர்க்கை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் ஐந்து பால்களில் வரும்.

1. அன், ஆன் – ஆண் பால்
2. அள், ஆள் – பெண் பால்
3. அர், ஆர், ப, மார், அர்கள், ஆர்கள் – பலர் பால்
4. டு, து, று – ஒன்றன் பால்
5. அ, ஐ, கள் – பலவின் பால்

✶ உம் என முடியும் வினைமுற்றுகள் (செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்று) ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றிற்கு உரியவை. பலர்பாலில் வராது.

✶ இய, இயர் என முடிபவை இடம், பால் அனைத்திற்கும் உரியவை.

✶ ஒருமை, பன்மை கொண்ட பெயர்ச்சொற்களை எழுதும்போது அவ்வவற்றிற்குத் தகுந்தாற்போல் வினைச்சொற்களைக் கொண்டு முடிக்க வேண்டும்.

| ஒருமை | பன்மை |
|---|---|
| புத்தகம் | **புத்தகங்கள்** |
| கால் | **கால்கள்** |
| மனிதர் | **மனிதர்கள்** |

✶ எடுத்துக்காட்டாக “மாடு மேய்கின்றன“ என்ற சொற்றொடரில் மாடு ஒருமை. ஒருமைப் பெயரைக் குறிக்கும்போது “மேய்கின்றன“ என்ற பன்மைப் பெயரைக் குறிக்கும் வினைச் சொல்லைப் பயன்படுத்துவது தவறு. “மேய்கிறது“ என்ற ஒருமைப் பெயரைக் குறிக்கக்கூடிய வினைச்சொல்லைப் பயன்படுத்த வேண்டும். ஆகவே

- மாடு மேய்கின்றன. – தவறு
  மாடுகள் மேய்கின்றன. – சரி
  மாடு மேய்கிறது. – சரி

- தமிழ்நாடு அணி போட்டியில் வென்றீர்கள். – தவறு
  தமிழ்நாடு அணி போட்டியில் வென்றனர். – தவறு
  தமிழ்நாடு அணி போட்டியில் வென்றது. – சரி

- ஆமைகள் வேகமாக ஓடும். – தவறு
  ஆமைகள் வேகமாக ஓடின. – தவறு
  ஆமைகள் வேகமாக ஓடா. – சரி
  ஆமைகள் வேகமாக ஓடாது. – தவறு

**வாக்கியங்களைப் பிழையின்றி எழுத சில இலக்கண நெறிகளைக் கையாள வேண்டும்.**

**அவைகளாவன,**

1. உயர்திணை எழுவாய், உயர்திணைப் பயனிலையைப் பெற்று வரும். அதேபோன்று அஃறிணை எழுவாய்க்குப்பின், அஃறிணை வினைமுற்றே (து, று) வர வேண்டும்.

   (எ.கா)
   - அவன் மிகவும் சிறந்தவன்
   - சுப்பன் மிக நல்லவன்
   - வண்டி வந்தது.
   - கோழி கூவிற்று

2. எழுவாய் ஐம்பால்களுள் எதில் உள்ளதோ அதற்கேற்ற வினைமுற்றையே பயன்படுத்த வேண்டும்.

   (எ.கா)
   - கோதை படித்தது – தவறு
     கோதை படித்தாள் – சரி

   - வண்டி ஓடா – தவறு
     வண்டி ஓடாது – சரி
     வண்டிகள் ஓடா – சரி

3. “கள்“ விகுதிபெற்ற எழுவாய், வினைமுற்றிலும் “கள்“ விகுதி பெறும். அதேபோன்று எழுவாய் “அர்“ விகுதி பெற்றிருந்தால் மரியாதைப் பன்மை வினைமுற்றில் “ஆர்“ விகுதி வருதலும், பலர்பால் வினைமுற்றில் “அர்“ விகுதி வருதலும் தெரிந்து கொள்ளலாம்.

   (எ.கா)
   - மாணவர்கள் தேர்வு எழுதினார் – தவறு
     மாணவர்கள் தேர்வு எழுதினார்கள் – சரி

   - மங்கையர்க்கரசியார் பேசினாள் – தவறு
     மங்கையர்க்கரசியார் பேசினார் – சரி

   - என் நண்பர் கூறினர், பலர் கூறினார் – தவறு
     என் நண்பர் கூறினார், பலர் கூறினர் – சரி

# 3.6 மரபுத் தமிழ்: திணை மரபு, பால் மரபு, காலம், இளமைப் பெயர்: வினைமரபு, தொகை மரபு

**"எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"** **(நூற்பா எண்: 387)**

**– நன்னூல்**

**மரபு:**

- **"நம் முன்னோர் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த முறைப்படி குறிப்பிட்டார்களோ அதே முறைப்படி வழங்குதல் மரபாகும்"** என்பதே இதன் பொருள்.
- சொல்லையும் பொருளையும் மட்டும் அல்லாது அவர்கள் மேற்கொண்ட செயல்களையும் அவ்வாறே பின்பற்றுவதும் மரபே.
- **"பண்பாட்டின் எல்லா நிலைகளிலும் மக்களால் பின்பற்றப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியே மரபு"** என்கிறது தமிழ் அகராதி.
- ஒரு காலத்தில் செய்யப்படுகின்ற செயல்களில் உண்மையும் நன்மையும் இருப்பின் அவை பின்வரும் தலைமுறையினரால் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டு வழிவழியாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. இவையே பின்னாளில் மரபாக நிலைத்துவிடுகின்றன.
- மரபின் முக்கியக் கூறுகள்:
  - பழைமையைப் பேணுவது
  - முன்னோர் வழியைப் பொன்னே போல் போற்றுவது
- ஊர்தோறும் நாடுதோறும் மக்களினம் வாழும் இடந்தோறும் இம்மரபுகள் நீக்கமற நிறைந்துள்ளன.

**பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள மரபுச் சொற்களின் வகைகள்.**

- திணை மரபு
- பால் மரபு
- கால மரபு
- இளமைப்பெயர் மரபு
- ஒலி மரபு
- வினை மரபு
- தொகை மரபு

## திணை மரபு

- திணை இருவகைப்படும்.

  1. உயர்திணை, 2. அஃறிணை (அல் + திணை)

  - உயர்திணை – ஆறறிவுடைய மக்கள்.
  - அஃறிணை – மற்ற உயிரினங்களும் உயிரற்ற பொருள்களும்.
- உயர்திணை, அஃறிணை ஆகியன ஐம்பால்கள் சார்ந்து வரும் அவை விரிவாகப் பால்மரபில் குறிப்பிடப்பட்டுள்ளது.

TAF

## 3.7 நிறுத்தல் குறியீடுகள்: கால்புள்ளி, அரைப் புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப் புள்ளி, வியப்புக் குறி, வினாக்குறி அமையும் இடங்கள்

**நிறுத்தற்குறிகளின் முக்கியத்துவம்:**

- "மறைமலையடிகள் மரணத்தின் பின் மனிதர் நிலை என்னும் நூலை இயற்றினார்".
- மரணத்திற்குப்பின் எவ்வாறு நூல் எழுத முடியும், சரியான நிறுத்தற்குறி இல்லாமையே பொருள் குழப்பத்திற்குக் காரணம்.

  மறைமலையடிகள், 'மரணத்தின் பின் மனிதர் நிலை' என்னும் நூலை இயற்றினார். இவ்வாறு எழுதும் போது பொருள் தெளிவாகிவிடும்.
- நிறுத்தற்குறிகள் ஒரு தொடரில் உள்ள பொருள் வேறுபாட்டை உணர்த்துவதற்கு அடிப்படையாக விளங்குகின்றன.
- நிறுத்தற்குறிகள் மொழியைப் பேசவும், படிக்கவும், எழுதவும் துணை புரிகின்றன.

**நிறுத்தக்குறிகள்:**

1. காற்புள்ளி (,)
2. அரைப்புள்ளி (;)
3. முக்காற்புள்ளி (:)
4. முற்றுப்புள்ளி (.)
5. வினாக்குறி (?)
6. உணர்ச்சிக்குறி (!)
7. ஒற்றை மேற்கோள்குறி (' ')
8. இரட்டை மேற்கோள்குறி (" ")

**I. காற்புள்ளி (,) :-**

- **பொருள்களைத் தனித்தனியாக/ பொருள்களை எண்ணும் இடங்களில் / பொருள்களை தொடர்ந்து குறிப்பிடும் இடங்களில்**

  (எ.கா) அறம், பொருள், இன்பம், வீடு என வாழ்க்கைப்பேறு நான்கு.

  கலைச்செல்வி, இளமதி, நன்மாறன் ஆகிய மூவரும் பரிசு பெற்றனர்.
- **எச்சச் சொற்றொடர்களில்**

  (எ.கா) நாம் எழுதும்போது, பிழையற எழுத வேண்டும்.
- **எடுத்துக்காட்டுகளில்**

  (எ.கா) அடிப்படை அலகுகளுக்கு எடுத்துக்காட்டு: நீளம், நிறை, காலம்
- **இணைப்புச் சொற்களில்**

  (எ.கா) இனியன் நன்கு படித்தான். அதனால், தேர்ச்சி பெற்றான்.
- **விளிப்பெயர்களின் பின்**

  (எ.கா) ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே, வணக்கம்.
- **திருமுகவிளி**

  (எ.கா) ஐயா, அம்மையீர்,
- **இணைமொழிகள்**

  (எ.கா) சிறியவன் பெரியவன், செல்வன் ஏழை.
- **பொருளைத் தொகுத்தோ, பிரித்தோ கூறுகையில், ஆதலால், ஆகையால் முதலிய சொற்களின்பின்**

  (எ.கா) ஆகையால், நாம் ஒன்று சேர வேண்டும். எனவே, நீங்கள் நன்கு படிக்க வேண்டும், அவர் நல்லவரே, ஆனால் வல்லவரல்லர். (9ம் வகுப்பு-2003)
- **மேற்கோள் குறிகளுக்கு முன்**

  (எ.கா) ஆசிரியர் மாணவர்களே, "உங்கள் கல்வி வளத்தைப் பொறுத்து, உங்கள் எதிர்காலம் அமையும்" என்றார்.
- **முகவரியில் இறுதிவரி தவிர்த்துப் பிற இடங்களில்**

  (எ.கா) நெ.10,
  அண்ணா நகர்,
  சென்னை.

அலகு-IV

# கலைச் சொற்கள்

## 4.1 பல்துறை சார்ந்த கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொற்கள்

**கலைச்சொல்**

- ஒரு துறையில் தொடர்ந்து பயன்படுத்தப்படும் சொற்களை கலைச்சொற்கள் என்கிறோம்.
- கலைச்சொற்கள், சொற்சிக்கனத்தோடு, பொருளின் ஆழத்தையும், துல்லியத்தன்மையையும் பெறுவதற்கான ஒரு வழிமுறையாகும்.
- ஒரு துறைசார்ந்த வல்லுநர்கள் தங்களிடையே அத்துறைசார் விடயங்களைச் சுருக்கமாகவும், துல்லியமாகவும் பரிமாறிக் கொள்வதற்குக் கலைச்சொற்கள் பயனுள்ளவையாக அமைகின்றன.
- கலைச்சொற்களின் உருவாக்கம், அவற்றின் சீர்தரப்படுத்தல், கலைச்சொல் அகரமுதலி உருவாக்கம் ஆகியவற்றை கலைச்சொல்லியல் என்கிறோம்.

### 6 - ஆம் வகுப்பு

- வலஞ்சுழி - Clock wise
- இடஞ்சுழி - Anti Clock wise
- இணையம் - Internet
- குரல் தேடல் - Voice Search
- தேடுபொறி - Search Engine
- தொடுதிரை - Touch Screen
- முகநூல் - Face book
- கண்டம் - Continent
- வலசை போதல் - Migration
- தட்பவெப்பநிலை - Climate
- புகலிடம் - Sanctuary
- புவிஈர்ப்புப்புலம் - Gravitational Field
- வானிலை - Weather
- செயற்கை நுண்ணறிவு - Artificial Intelligence
- ஆய்வு - Research
- மீத்திறன் கணினி - Super Computer
- கோள் - Planet
- ஔடதம் - Medicine
- எந்திர மனிதன் - Robot
- செயற்கைக்கோள் - Satellite
- நுண்ணறிவு - Intelligence
- கல்வி - Education
- தொடக்கப்பள்ளி - Primary School
- மேல்நிலைப்பள்ளி - Higher Secondary School
- நூலகம் - Library
- மின்படிக்கட்டு - Escalator
- மின்தூக்கி - Lift
- மின்னஞ்சல் - E - mail
- குறுந்தகடு - Compact Disk (CD)
- மின் நூலகம் - E - Library
- மின் நூல் - E – Book
- மின் இதழ் - E – Magazine
- நல்வரவு - Welcome
- சிற்பங்கள் - Sculptures
- சில்லுகள் - Chips
- ஆயத்த ஆடை - Readymade Dress
- ஒப்பனை - Makeup
- சிற்றுண்டி - Tiffin
- பண்டம் - Commodity
- கடற்பயணம் - Voyage
- பயணப்படகுகள் - Ferries
- தொழில் முனைவோர் - Entrepreneur
- பாரம்பரியம் - Heritage
- கலப்படம் - Adulteration

# அலகு -V வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன்

## 5.1 கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் – செய்தித்தாள் – தலையங்கம் – முகப்புச் செய்திகள் – அரசு சார்ந்த செய்திகள் – கட்டுரைகள் – இவற்றை வாசித்தல், புரிந்து கொள்ளும் திறன்

### கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்

**தலைப்பு:**

* இந்தப் பகுதியில் ஒன்று (அ) இரண்டு பத்திகள் அளவில் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கும் .
* கொடுக்கப்பட்ட பத்தியில் இருந்து இரண்டு முதல் ஐந்து வினாக்கள் வரை கேட்கப்படலாம்.
* கேட்கப்படும் வினாக்களுக்கு உரிய விடையைப் பத்தியிலிருந்து மட்டுமே தேர்வு செய்ய வேண்டும்.
* சரியான (அ) மிகச் சரியான விடை கொள்குறியில் இருப்பினும் பத்தியில் கொடுக்கப்படவில்லையெனில் அதனைத் தேர்வு செய்யக் கூடாது.
* பத்தியில் கொடுக்கப்படாத குறிப்புகள் தவிர்த்து உங்களுக்குத் தெரிந்த குறிப்புகளை கொண்டு விடையைத் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தக் கூடாது.

(எ.கா) :

கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளி :

1963 ஆம் ஆண்டு இந்தியத் தொல்லியல் துறையினர் பூம்புகார் என்னும் இடத்தில் மேற்கொண்ட கடல் அகழாய்வின் போது மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டட இடிபாடுகள் கிடைத்தன. இந்த அகழாய்வில் செங்கற்களால் கட்டப்பட்ட படகுத் துறை அரைவட்ட வடிவிலான நீர்த்தேக்கம், புத்தவிகாரம், வெண்கலத்தால் ஆன புத்தர் பாதம் முதலிய எச்சங்கள் கிடைத்தன.

**1. 1963 ஆம் ஆண்டு அகழாய்வு நடைபெற்ற இடம் எது?**

A) கிழார் வெளி B) ஆதிச்ச நல்லூர்
C) அரிக்க மேடு D) **பூம்புகார்**

மேற்காணும் வினாவிற்கு மிகச்சரியான விடை கிழார்வெளி. ஆனால் அது அந்தப் பத்தியில் கொடுக்கப்படவில்லை எனவே, நாம் தேர்ந்தெடுக்க வேண்டியது பூம்புகார் என்னும் பதிலைத்தான். மேலும் தகுந்த பதில் கொள்குறியிலோ (அ) பத்தியிலோ ‘போதுமான தகவல் இல்லை’ என்பது போன்ற பதில் கொள்குறியில் இருக்குமானால் அதனைத் தேர்ந்து எடுத்தல் வேண்டும். இந்தப் பாடத்திட்டத்திற்குத் தேவையான மாதிரிகளைக் கீழே காண்போம்.

## 5.2 உவமைத் தொடரின் பொருளறிதல்

**உவமை :**

- ஒரு பொருளைச் சிறப்பித்துக் கூற, அதனைவிடச் சிறந்த வேறொரு பொருளோடு ஒப்பிடுவதே உவமித்து கூறுதல் ஆகும்.
- ஒன்றை விளக்கவும் தெளிவுபடுத்தவும் அழகுபடுத்தவும் எளியதும், தொன்மை மிக்கதும் – **உவமை**
- கருத்தைச் சொல்கையில் கேட்போர் மனத்தை ஈர்க்கும் வகையிலும் சொல்வதை எளிதில் உணரும் வகையிலும் கூற **உவமை (ஒப்பீடு)** பயன்படுகிறது.
- **உவமை உவமானம்** எனவும் அழைக்கப்படும்.
- உவமைத் தொடரில் உவமை முன்னும் உவமேயம் (பொருள்) பின்னுமாக அமையும்.
- **உவம உருபுகள் சில :** போல, புரைய, ஒப்ப, உறழ இன்னும் சில

**“போலப் புரைய ஒப்ப உறழ**
**மானக் கடுப்ப இயைப ஏய்ப்ப**
**நேர நிகர அன்ன இன்ன**
**என்பவும் பிறவும் உவமத் துருபே”**
**– நன்னூல்**

**உதாரணம்:–**

- தமிழரசி தேன் போல பாடினாள்
  - ✓ தமிழரசி – உவமேயம் (சிறப்பிக்கப்படும் பொருள்)
  - ✓ தேன் – இது உவமை அல்லது உவமானம் எனப்படும் (ஒப்பாகக் காட்டப்படும் பொருள்)
  - ✓ போல – உவம உருபு
  - ✓ பாடுதல் – பொதுத்தன்மை

**இன்னும் சில உதாரணங்கள்**

- ✓ போல – மயில்போலப் பாடினாள்
- ✓ புரைய – வேய்புரை தோள்
- ✓ உறழ – முழவு உறழ் தடக்கை
- ✓ அன்ன – மலரன்ன சேவடி
- ✓ ஒப்பு – தாயொப்பப் பேசும் மனைவி

## 5.3 மரபுத் தொடரின் பொருளறிதல்

- ✶ மரபுத்தொடரின் பொருளறிதல் என்பது, முன்னோர்கள் பயன்படுத்திய சொற்கள், தற்போதைய காலகட்டத்திலும் பயன்படுத்தப்படுவதன் காரணமாக, அவற்றின் பொருளை அறிந்துகொள்வதாகும்.
- ✶ ஒரு சொல் அல்லது சொற்றொடர், அதன் நேர்ப்பொருளை உணர்த்தாமல் தொடரும் பயன்பாட்டில் வழிவழியாக வேறு குறிப்புப் பொருளினைத் தந்து நிற்கும்போது அவற்றை மரபுத்தொடர் அல்லது மொழி மரபு அல்லது மொழி வழக்கு அல்லது இலக்கனைத் தொடர் அல்லது சொலவடை என்பர்.
- ✶ மரபுத்தொடர்கள், பொதுவாக வழங்கும் தொடர்களும், வட்டாரம்தோறும் சிறுசிறு வேறுபாட்டுடன் வழங்கும் தொடர்களும் ஆகும்.
- ✶ மரபுச் சொற்றொடர்க்கு நேரடிப்பொருள் கொள்ளாது, அதன் உட்பொருளை அறிந்து கொள்ளுதல் வேண்டும்.
- ✶ நாம் பேச்சிலும் எழுத்திலும் சில மரபுத்தொடர்களைப் பயன்படுத்துகிறோம். அத்தொடர்கள் நம்முடைய கருத்துகளுக்கு வலுச்சேர்க்கின்றன. சில மரபுத்தொடர்களுக்கு நேரடிப்பொருள் கொள்ளாமல், அவற்றின் உட்பொருளை அறிந்து பயன்படுத்த வேண்டும்.

<u>எ.கா:</u>

1. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று சொன்ன காலம் **மலையெறிவிட்டது**.
   இங்கு மலையேறிவிட்டது என்பதன் பொருள் – காலம் மாறிவிட்டது.
2. திண்டுக்கல் பூக்கள் உற்பத்தியில் **கொடிகட்டிப் பறக்கும்** நகரமாக விளங்குகிறது.
   கொடிகட்டிப் பறத்தல் – புகழ்பெற்று விளங்குதல்.
3. அவர் ஓர் **அவசரக்குடுக்கை.**
   அவரசக்குடுக்கை – எண்ணிச் செயல்படாமை

TAF IAS ACADEMY

### <u>மரபுத் தொடரும் பொருளும்:</u>

| தொடர் | பொருள் |
|---|---|
| ✶ ஆயிரங் காலத்துப் பயிர் | – நீண்ட காலத்திற்குரியது |
| ✶ எடுப்பார் கைப்பிள்ளை | – தன் சிந்தனையின்றிச் சொல்பவர் பேச்சைக் கேட்டு நடப்பவர். |
| ✶ ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது | – பட்டறிவில்லாத படிப்பறிவு |
| ✶ அவலை நினைத்து உரலை இடித்தல் | – எண்ணமும் செயலும் ஒத்துவராமை |
| ✶ முதலைக்கண்ணீர் | – பொய்யமுகை |
| ✶ அவசரக்குடுக்கை | – எண்ணித் துணியாதார் |
| ✶ ஆகாயத்தாமரை | – இல்லாத ஒன்று |
| ✶ கம்பி நீட்டல் | – சொல்லிக்கொள்ளாமல் செல்லல் |
| ✶ தாளம்போடுதல் | – எதைச் சொன்னாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் |
| ✶ கானல்நீர் | – இருப்பதுபோல் தோன்றும் ஆனால் இராதது. |
| ✶ பஞ்சாய்ப் பறத்தல் | – அலைந்து திரிதல் |
| ✶ குட்டிச்சுவர் | – பயனின்றி இருத்தல் |
| ✶ கொட்டியளத்தல் | – மிகுதியாகப் பேசுதல் |

## 5.4 பழமொழிகள் பொருளறிதல்

- ஒரு சமுதாயத்தின் பழமையான சிந்தனையும், அறிவுச் சொத்தும், நீண்ட காலமாகப் புழக்கத்தில் இருந்து வரும் அனுபவக் குறிப்புகளும் ஆகும்.
- பழமொழிகள் ஒரு சமுதாயத்தினரின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக் கூர்மையையும் எடுத்து விளக்குகிறது.
- இவை பெரும்பாலும் பதிவு செய்யப்படாத வாய்மொழி வழக்காகவும் நாட்டுப்புறவியலின் ஒரு கூறாகவும் அமைகின்றன.
- தமிழ் இலக்கிய வரலாற்றில் பழமொழிக்கு என்று தனி நூலாக உள்ள நூல் – பழமொழி நானூறு.

### <u>ஆங்கிலப் பழமொழிக்கு இணையான தமிழ்ப் பழமொழிகள்</u>

- Bend the tree while it is young - ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?
- As is the mother, so is her daughter - தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போல சேலை
- A friend in need is a friend indeed - உயிர்காப்பான் தோழன்
- Blood is thicker than water - தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்
- Crying child will get milk - அழுத பிள்ளை பால் குடிக்கும்
- Make hay while the Sunshines - காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
- The childhood shows the man - விளையும் பயிர் முளையிலே தெரியும்
- All is well than ends well - முதற்கோணல் முற்றிலும் கோணல்
- A good marksman may miss - ஆனைக்கும் அடி சறுக்கும்
- In fiddler's house all are dancers - கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்
- No man can flay a stone - கல்லிலே நார் உரிக்க முடியுமா?
- Difficulties give way to diligence - கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்
- Charity is a double blessing - தருமம் தலை காக்கும்
- One flower makes no garland - தனிமரம் தோப்பாகாது
- Little wealth little care - மடியில் கனமில்லையென்றால் வழியில் பயமில்லை
- Look before you leap - ஆழம் அறியாமல் காலை விடாதே
- Something is better than nothing - ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை
- Though he endeavors all he can – புலியைப் பார்த்துத் பூனை சூடுபோட்டுக் கொண்டாற்போல்
- No rains no grains - மாரியல்லது காரியம் இல்லை
- Bad words find bad acceptance - நுணலும் தன் வாயாற் கெடும்
- Practice makes perfect - சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்
- Misfortune never comes single - பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்
- Look no gift horse in the mouth - தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கலாமா?

**எடுத்துக்காட்டு: 3 (அறிவுறுத்தல் கடிதம்)**

**அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்- ஒரே தவணையில் நிதி விடுவித்தல்**

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
**கடித எண்.29437/மா அதி-2/2006-1 நாள் : 19.10.2006**

**அனுப்புநர்**

திரு. XXXXXX .இ.ஆ.ப.
அரசு செயலாளர்.

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர், சென்னை-15
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக)
ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை-3
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட அலுவலர்கள்
கருவூலக் கணக்கு ஆணையாளர், சென்னை-35
மாநில தலைமை கணக்காயர், சென்னை-6/18/35
சம்பளக் கணக்க அலுவலர் (தெற்கு) சென்னை-35
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்) சென்னை-9
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

**ஐயா,**

**பொருள் :** திட்டங்கள்-புதிய மாநில திட்டம்-அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் அறிமுகப்படுத்துதல்-திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்-ஆணை வெளியிடப்பட்டது-திருத்தம் வெளியிடப்படுகிறது.

**பார்வை :** அரசு ஆணை (நிலை) எண்.115, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் துறை நாள் 11.09.2006

**திருத்தம்**

11.09.2006 நாளிட்ட ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி துறையின் அரசாணை நிலை எண்.115-ல் பத்தி 5-க்குப் பதிலாக பின்வருமாறு வாசிக்கவும்.

**நிதி ஒதுக்கீடு**

நமது கிராமம் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.175 கோடி, வறுமை ஒழிப்பு திட்டத்திற்கு (ultra poor) ஒதுக்கப்பட்ட ரூ.20 கோடி, ஊரக குடியிருப்பு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.50 கோடி மற்றும் தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.75 கோடி ஆகியவற்றோடு ரூ.90 கோடி கூடுதலாக சேர்த்து 2006-2007 திருத்திய வரவு செலவு திட்டத்தில் ரூ.410 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான எஞ்சிய ரூ.90 கோடி நிதியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் தொகையில் உள்ள சமன்பாடு நிதி மற்றும் ஊக்கத் தொகை நிதிகளிலிருந்து ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட மொத்தம் ரூ.500 கோடி நிதியை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து நடப்பு ஆண்டில் பயன்படுத்த அரசு ஆணையிடுகிறது.

இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டியதின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு மேற்குறிப்பிட்ட ரூ.410 கோடியை (ரூபாய் நானூற்று பத்து கோடி மட்டும்) ஒரே தவணையில் விடுவித்து அரசு ஆணையிடுகிறது.

இக்கடிதம் நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.300/DS(B)/2006, நாள் 19.10.2006 பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

அரசு செயலாளருக்காக

**மேற்கண்ட கடிதத்திலிருந்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்க.**

1. ரூபாய் 50 கோடியானது எந்த திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக மேற்கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது?
   A) தன்னிறைவுத் திட்டம் B) நமது கிராமம் திட்டம்
   C) ஊரக குடியிருப்புத் திட்டம் D) வறுமை ஒழிப்புத் திட்டம்
2. மேற்கண்ட கடிதமானது அரசின் எந்த துறையினால் வெளியிடப்பட்டுள்ளது?
   A) ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் துறை B) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
   C) வேளாண்மை உழவர் நலத் துறை D) மனித வள மேலாண்மைத் துறை
3. பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள சரியான ஆணை எண் எது?
   A) சார்பற்ற எண்.300 B) அரசாணை நிலை எண்.115
   C) சார்பற்ற எண்.115 D) அரசாணை நிலை எண்.300
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கடித எண் எது?
   A) 29427/மா அதி-2/2006-1 B) 29487/மா அதி-2/2006-1
   C) 29417/மா அதி-2/2006-1 D) 29437/மா அதி-2/2006-1
5. ரூ.500/- கோடி நிதி ஒதுக்கீட்டில் ரூ.410/- கோடி போக எஞ்சிய ரூ.90/- கோடியானது எந்த நிதியிலுருந்து ஒதுக்கீடு செய்யப்படும் என கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது?
   A) முதலமைச்சரின் நிவாரண நிதி B) மாநில பேரிடர் நிவாரண நிதி
   C) சமன்நிதி மற்றும் ஊக்கத் தொகை நிதி D) மத்திய அரசின் மாநில உள்கட்டமைப்பு நிதி

**விடைகள்**

| 1 | A | 2 | B | 3 | B | 4 | D | 5 | C |
|---|---|---|---|---|---|---|---|---|---|

**எடுத்துக்காட்டு: 4 (அறிவிப்பு)**

**XXXXX ஊராட்சி ஒன்றியம்**
**ஈப்பு வாகனம் ஏல அறிவிப்பு**

ந.க.எண்.அ4/2882/2022 நாள். .06.2024

XXXXX ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பயன்பாட்டிலிருந்த Tata Spacia Gold ஈப்பு எண் TN09G2502 சென்னை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.3) துறை அரசாணை (2U) எண். 23 ன்படி XXXXX ஊராட்சி ஒன்றிய மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம் 1) மூலம் 05.07.2024 அன்று காலை 11.00 மணியளவில் XXXXX ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பொது ஏலம் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | வாகன எண் | வாகனத்தின் பெயர் | ஏலம் கேட்பவர் செலுத்த வேண்டிய டெபாசிட் தொகை ரூ | ஏலம் நடைபெறும் நாள் / நேரம் |
|---|---|---|---|---|
| 1. | TN09G2502 | Tata Spacia Gold BS III | 2000.00 | 05.07.2024 / 11.00 மு.ப |

அலகு-VI

# எளிய மொழி பெயர்ப்பு

## 6.1 ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அறிதல்

✶ இந்தப் பகுதியில் கொடுக்கப்பட்ட ஆங்கிலச் சொல்லுக்கு தமிழ்ச்சொல் தரும்போது தனித்தமிழ் சொல்லுக்கே அதிக முன்னுரிமை தரவேண்டும்.

(எ.கா) Village என்ற சொல்லுக்கு கிராமம், சிற்றூர் என இரு வாய்ப்பு விடைகள் இருந்தால், சிற்றூர் என்பதையை தெரிவு செய்ய வேண்டும்.

✶ கலைச் சொற்களுக்கு இடையேயான நுட்பமான பொருள் வேறுபாட்டை உணர வேண்டும்.

(எ.கா) Cheque என்பது காசோலை, Draft என்பது வரைவோலை

✶ அதே போன்று பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொற்களையும் அறிந்து பயன்படுத்த வேண்டும்.

### ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள்

✶ டிவி – தொலைக்காட்சி
✶ ரேடியோ – வானொலி
✶ டிபன் – சிற்றுண்டி
✶ டீ – தேநீர்
✶ கரண்ட் – மின்சாரம்
✶ டெலிபோன் – தொலைபேசி
✶ ஃபேன் – மின்விசிறி
✶ சேர் – நாற்காலி
✶ லைட் – விளக்கு
✶ தம்ளர் – குவளை
✶ சைக்கிள் – மிதிவண்டி
✶ பிளாட்பாரம் – நடைமேடை
✶ ஆபீஸ் – அலுவலகம்
✶ சினிமா – திரைப்படம்
✶ டைப்ரைட்டர் – தட்டச்சுப்பொறி
✶ ரோடு – சாலை
✶ பிளைட் – வானூர்தி
✶ பேங்க் – வங்கி
✶ தியேட்டர் – திரையரங்கு
✶ ஆஸ்பத்திரி – மருத்துவமனை
✶ கம்ப்யூட்டர் – கணினி
✶ காலேஜ் – கல்லூரி
✶ யுனிவர்சிட்டி – பல்கலைக்கழகம்
✶ டெலஸ்கோப் – தொலைநோக்கி
✶ தெர்மாமீட்டர் – வெப்பமானி
✶ இண்டர்நெட் – இணையம்
✶ ஸ்கூல் – பள்ளி
✶ சயின்ஸ் – அறிவியல்
✶ மைக்ராஸ்கோப் – நுண்ணோக்கி
✶ நம்பர் – எண்

**ஆங்கில சொல்லுக்கு தமிழ்ச்சொல் தருதல்.**

- ✶ Abstract - சுருக்கம்
- ✶ Academy - கல்விச்சாலை
- ✶ Accountancy - கணக்கியல்
- ✶ Accountant - கணக்கர்
- ✶ Acknowledgement - ஒப்புகை
- ✶ Appendix - பின்இணைப்பு
- ✶ Applause - ஆரவாரப் பாராட்டு / கைதட்டல்
- ✶ Appliances - துணைக் கருவிகள் / வீட்டு உபயோகப் பொருட்கள்
- ✶ Biodiversity - பல்லுயிர் பெருக்கம் / பல்லுயிர் வகைமை
- ✶ Biotechnology - உயிரி தொழில்நுட்பம்
- ✶ Bill - சட்டமுன் வரைவு / மசோதா
- ✶ Casting Vote - அறுதி வாக்கு
- ✶ Cease – Fire - போர் நிறுத்தம்
- ✶ Censor Board - தணிக்கை குழு
- ✶ Censure - கண்டனம்
- ✶ Census - மக்கள்தொகை கணக்கு
- ✶ Centenary - நூறு / நூற்றாண்டு
- ✶ Certificate - சான்றிதழ்
- ✶ Cess - மேல்வரி / வீதவரி
- ✶ Chalk - சுண்ணாம்புக்கட்டி
- ✶ Charts - விளக்கப்படங்கள்
- ✶ Cheque - காசோலை
- ✶ Choice - விருப்பேற்பு / உகப்பு
- ✶ Circular - சுற்றறிக்கை
- ✶ Circulation Note - சுற்று குறிப்பு
- ✶ Citation - மேற்கோள்
- ✶ CIVIC Amenities - நகர வசதிகள்
- ✶ CIVIC Consciousness - குடிமை நல உணர்வு
- ✶ Civil Engineer - கட்டிடப் பொறியாளர்
- ✶ Civilization - நாகரிகம்
- ✶ Civil Service - குடிமுறை அரசுப்பணி / குடிமைப்பணி
- ✶ Civil Suit - உரிமையில் வழக்கு
- ✶ CIVIL War - உள்நாட்டுப்போர் / உள்நாட்டுக்கலகம்
- ✶ Citizen - குடிமகன்
- ✶ Clash - மோதுதல் / கைகலப்பு / சச்சரவு
- ✶ Clearance Certificate - தடை நீக்கச் சான்றிதழ்
- ✶ Client - கட்சிக்காரர் / சார்ந்திருக்கின்றவர்.
- ✶ Cognizable – Offence - பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய வழக்கு

## 6.2 பயன்பாட்டில் உள்ள ஆங்கிலச் சொற்களை மொழிபெயர்த்தல்

| ஆங்கிலச் சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| Acknowledgement | ஏற்றுக்கோடல், ஒப்புக் கொள்ளல், ஒப்பளித்தல் |
| Administration | ஆட்சி, நிர்வாகம், ஆளுகை |
| Admission | சேர்க்கை |
| Advocate | வழக்குரைஞர் |
| Aerial | வானலைவாங்கி, வான்கம்பி |
| Aero plane | விமானம் |
| Agent | முகவர் |
| Agreement | உடன்படிக்கை |
| Allergy | ஒவ்வாமை |
| Amendment | திருத்தம் |
| Anchor | நங்கூரம் |
| Anicut | அணைக்கட்டு |
| Apology | மன்னிப்பு |
| Application | விண்ணப்பம் |
| Appointment | அமர்த்தானை, நியமனம், நியமன ஆணை |
| Assemble | திரள், ஒன்று கூட்டு |
| Assembly | சட்டசபை |
| Attendance | வருகைப்பதிவு |
| Auditor | தணிக்கையாளர் |
| Auditorium | அரங்கம் |
| Auto rickshaw | மூன்று சக்கர வாகனம் |
| Autography | நினைவேடு |
| Avenue | நிழற்சாலை |
| Bag | பை |
| Bakery | வெதுப்பகம்/ அடுமனை |
| Balcony | முன்மாடம், மாடி முகப்பு |
| Ballot paper | வாக்குச் சீட்டு |

| | |
|---|---|
| Bata | படித்தொகை |
| Bathroom | குளியல் அறை |
| Battery | மின்கலம் |
| Bed room | படுக்கையறை |
| Belt | வார்ப்பட்டை |
| Betel leaf | வெற்றிலை |
| Bicycle | மிதியுந்து |
| Bike/ Scooter | மதி வண்டி/ ஈருருளை வண்டி |
| Bill | பட்டியல், பணப்படி |
| Bio data | வாழ்க்கைக் குறிப்பு |
| Board | வாரியம், குழு |
| Bonafide Certificate | ஆளறி சான்றிதழ், உறுதிச் சான்றிதழ் |
| Book post | நூலஞ்சல் |
| Bore well | துளைக்கிணறு |
| Bottle | குப்பி |
| Browser | உலவி |
| Budget | வரவு செலவுத் திட்டம் |
| Bulb | ஒளிர்குமிழி |
| Bus | பேருந்து |
| Bypass surgery | மாற்று அறுவை சிகிச்சை |
| Cable | கம்பி |
| Call | அழை/ கூப்பிடு |
| Camera | காட்சிப் பதிவுக்கருவி |
| Campus | வளாகம் |
| Cash | காசு |
| Cassette | நாடாப் பெட்டி, பேழை |
| Catamaran | கட்டுமரம் |
| Cellphone | கைப்பேசி |
| Certificate | சான்றிதழ் |
| Chalk/Black Board | சுண்ணாக்கட்டி/ கரும்பலகை |

## 6.3 ஆவணங்களின் தலைப்பு – கோப்புகள் – கடிதங்கள் – மனுக்கள் – மொழிபெயர்ப்பு புரிந்து கொள்ளுதல்

### ஆவணம் (Document)

- ஆவணம் என்பது எண்ணங்களை எழுதியோ, வரைந்தோ காட்சிப்படுத்தும் கோப்பு ஆகும்.
- இது காகிதத்தில் வெளிவந்தாலும், கணினிக் கோப்புகளாகவும் உருவாக்கப்படுகிறது.
- எதிர்காலப் பயன்பாட்டிற்காக சேமித்து பாதுகாக்கப்பட வேண்டியது. – ஆவணம்.
- கல்வி, வணிகம், நிர்வாகம் போன்ற பல்வேறு துறைகளில் ஆவணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

### எடுத்துக்காட்டு ஆவணங்கள்:

- **கல்வித்துறை:** ஆய்விதழ்
- **வியாபாரம்:** விலைச்சிட்டை, செயல்திட்ட வேண்டுகோள், ஒப்பந்தம், விரிதாள், பொருள் பாதுகாப்பு குறிப்புத்தாள்,
- **சட்டம்:** நீதிமன்ற அழைப்பாணை, உரிமம்.
- **அரசு:** வெள்ளை அறிக்கை, அரசாணை, அரசிதழ், ஒப்பந்தப்புள்ளிகள், பதிவேடுகள், அறிக்கைகள்
- **ஊடகம்:** திரைக்கதை
- **வரலாறு:** கையெழுத்துப்படிகள், நாட்குறிப்புகள்,

TAF IAS ACADEMY

### கோப்புகள் (Files)

- கோப்புகள் என்பது குறிப்பிட்ட தகவல்களை ஒரு தொகுப்பாக வகைப்படுத்திய வடிவம் ஆகும்.
  - கணிணியில் சேமிக்கப்படும் தகவல் தொகுப்பை கணினிக் கோப்பு என்பர்.
  - அலுவலகங்களில், பொருள் சார்ந்த தகவல்களை பராமரிக்கப் பயன்படுத்தப்படுவது அலுவலகக் கோப்பு ஆகும்.
- ஒவ்வொரு பொருள் சார்ந்து நிருவாக அடிப்படையில் பராமரிக்கப்படும் தகவல் நடைமுறை அலுவலகக் கோப்பு எனப்படுகிறது.
- இக்கோப்புகள் ஆண்டுகள் பலவாயினும் மீண்டும் தேவைப்படும் நேரத்தில் தகவல்களைத் தெரிந்துகொள்ள உறுதுணை புரியும்.

### கடிதங்கள்:

- கடிதம் எழுத்து மொழியின் மிகப் பழமையான வடிவம்.
- தமிழ் இலக்கியங்களில் கடிதத்தை ‘ஓலை’,‘திருமுகம்’,‘முடங்கல்’ என்றெல்லாம் வழங்கியுள்ளனர்.
- தற்போது வழக்கு மொழியில் கடிதத்தைக் ‘கடுதாசி’ என்றும் ‘காயிதம்’ என்றும் குறிப்பிடுகின்றனர்.
- ஏதேனும் ஒரு செய்தியை ஒருவர் மற்றொருவருக்கு எழுதி அனுப்புவது என்பது கடிதத்தின் இயல்பு.

### கடிதத்தின் அமைப்பு

1. தலைப்பு – முகவரி, தேதி இடம் பெறும் பகுதி.
2. விளி – அன்புள்ள, அன்புடையீர், மதிப்பிற்குரிய, அம்மையீர், ஐயா இடம் பெறும் பகுதி.
3. உடல் – கூற வேண்டிய செய்தி இடம் பெறும் பகுதி.
4. முடிப்பு – அன்புடன், உங்கள், தங்கள், உண்மையுள்ள, இங்ஙனம் இடம் பெறும் பகுதி.
5. கையெழுத்து – கையொப்பம் இடம் பெறும் பகுதி.

**சுருக்கம்**

தமிழ்நாடு உடற்கூறியல் சட்டம், 1951 (தமிழ்நாடு சட்டம் 1951) – கன்னியாகுமரி மருத்துவப் பணி ஆராய்ச்சி மையம், முட்டம், கன்னியாகுமரியை கற்பிக்கும் மருத்துவ நிறுவனமாக அறிவித்தல் – அறிவிப்பு – வெளியிடப்பட்டது.

**சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வு (Z1) துறை**

G.O. (3D) எண். 16

தேதி : 02.08.2024
திருவள்ளுவர் ஆண்டு 2055
குரோதி வருடம், ஆடி – 17.

**படிக்க:**

சென்னை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரிடமிருந்து
கடிதம் எண்: 3305/ H & D / II / 11 / 2024, தேதி: 30.05.2024.

---------

**ஆணை:**

மேலே வாசிக்கப்பட்ட கடிதத்தில், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குனர் தமிழ்நாடு உடற்கூறியல் சட்டம், 1951 (தமிழ்நாடு சட்டம் XVIII, 1951) இன் கீழ், கன்னியாகுமரி மருத்துவ பணி ஆராய்ச்சி மையம், முட்டம், கன்னியாகுமரி மருத்துவக் கல்வி நிறுவனங்களுக்கான முன்மொழிவை அனுப்பியுள்ளார்.

2. கவனமாக ஆய்வு செய்த அரசு, மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரின் முன்மொழிவை ஏற்று, கன்னியாகுமரி மருத்துவ பணி ஆராய்ச்சி மையம், முட்டம், கன்னியாகுமரி, தமிழ்நாடு உடற்கூறியல் சட்டம், 1951 (தமிழ்நாடு சட்டம் XVIII 1951) இன் கீழ், தமிழ்நாடு அரசின் அரசிதழில் வெளியிடுவதன் மூலம் கற்பிக்கும் மருத்துவ நிறுவனங்களின் பட்டியலில் சேர்க்க முடிவு செய்தது. இந்த அரசு ஆணை / அரசிதழ் அறிவிப்பு, பிற்காலத்தில், மேற்கண்ட கல்லூரி இந்திய மருத்துவக் கவுன்சிலின் பிற கட்டாயத் தேவைகளைப் பூர்த்தி செய்ததாகச் சான்றளிக்கக் கூடாது.

3. பின்வரும் அறிவிப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும்:–

**அறிவிப்பு:**

தமிழ்நாடு உடற்கூறியல் சட்டம், 1951 (தமிழ்நாடு சட்டம் XVIII 1951) பிரிவு 2 இன் பிரிவு (e) இன் கீழ், சட்டத்தின் நோக்கத்திற்காக, கன்னியாகுமரி, முட்டம், கன்னியாகுமரி மருத்துவப் பணி ஆராய்ச்சி மையத்தை ஒரு கற்பித்தல் மருத்துவ நிறுவனமாக தமிழக ஆளுநர் இதன் மூலம் அறிவிக்கிறார்.

**(ஆளுநர் உத்தரவின்படி)**

**XXXX,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**
மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர், சென்னை – 600 010
மருத்துவம் மற்றும் ஊரக சுகாதாரப் பணிகள் இயக்குநர், சென்னை – 600 006
பணி மேலாளர், அரசு மத்திய அச்சகம், சென்னை – 600 079
(தமிழ்நாடு அரசிதழில் அறிவிப்பை வெளியிடுவதற்காக)

**நகல்:–**
கல்லூரித் தலைவர், கன்னியாகுமரி மருத்துவப் பணி ஆராய்ச்சி மையம், முட்டம்,
கன்னியாகுமரி (மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மூலம், சென்னை – 600 010),
சட்டத்துறை, சென்னை – 600 009,
உடல்நலம் மற்றும் மக்கள் நல்வாழ்வு (தேதி / MCA) துறை, சென்னை – 600 009,
பங்கு கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்பட்டது//**

**பிரிவு அதிகாரி.**

**மேற்கண்ட அரசாணையிலிருந்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ‘ஆணை’ என்ற சொல்லிற்கு இணையான ஆங்கிலச் சொல்லைத் தேர்க.
   A) Origin B) Gazette C) Order D) Notification
2. ‘Welfare’ என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச் சொல்லினைத் தேர்ந்தெடு.
   A) சுகாதாரம் B) மக்கள் C) நல்வாழ்வு D) அரசிதழ்
3. மேற்கண்ட அரசாணையானது எந்த மாவட்ட மருத்துவமனைக்கானது?
   A) Karur B) Chennai
   C) Madurai D) Kanniyakumari
4. ‘உடற்கூறு’ என்ற தமிழ்ச் சொல்லிற்கு இணையான ஆங்கிலச் சொல்லைத் தேர்ந்தெடு.
   A) Hospital B) Anatomy C) Health D) Welfare
5. மேற்கண்ட அரசாணையில் ‘G.O’ என்பதன் விரிவாக்கம் என்ன?
   A) Government Order B) Governor Order
   C) Gazette Order D) Governor Office

**விடைகள்**

| 1 | C | 2 | C | 3 | D | 4 | B | 5 | A |
|---|---|---|---|---|---|---|---|---|---|

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

16 ஆண்டுகளில் 15,985+ பேருக்கு அரசுப்பணி

# TAF IAS ACADEMY

Coaching for :
UPSC - TNPSC - POLICE - SI - TET
TRB - RAILWAY - BANKING - SSC

TAF ONLINE OFFICE :
8668029422, 6382809713

| | |
|---|---|
| கடலூர் | 8220444230 |
| சிதம்பரம் | 7358764300 |
| காட்டுமன்னார்கோயில் | 8807384300 |
| பண்ருட்டி | 9787026300 |
| வடலூர் | 8220444801 |
| விருத்தாசலம் | 7397620900 |
| தொழுதூர் | 8220444501 |
| மயிலாடுதுறை | 9790280400 |
| திருவாரூர் | 9751121400 |
| சீர்காழி | 7845570300 |
| நாகப்பட்டினம் | 9791159300 |

| | |
|---|---|
| விழுப்புரம் | 82204 44246 |
| செஞ்சி | 95978 63300 |
| திருக்கோவிலூர் | 97515 60300 |
| திண்டிவனம் | 97870 87300 |

| | |
|---|---|
| மதுரை | 9952632300 |
| சிவகங்கை | 9843979300 |
| பரமக்குடி | 9943260300 |
| காரைக்குடி | 9626045300 |
| தேனி | 9655758500 |
| திண்டுக்கல் | 8438779300 |




| | |
|---|---|
| திருவண்ணாமலை | 9566186300 |
| திருப்பத்தூர் | 8754987300 |
| வேலூர் | 8754380300 |
| தர்மபுரி | 8270445300 |
| கிருஷ்ணகிரி | 8523968300 |
| செங்கல்பட்டு | 7358983300 |
| திருவள்ளூர் | 9787010300 |
| சங்கராபுரம் | 8807574300 |
| கள்ளக்குறிச்சி | 7358765300 |
| ஆத்தூர் | 6385745300 |
| சேலம் | 8883351300 |
| ஆற்காடு | 9787067300 |
| செய்யாறு | 9787088300 |
| ஓசூர் | 6385868300 |
| மேட்டூர் | 8883351300 |

| | |
|---|---|
| தஞ்சாவூர் | 9751130400 |
| கும்பகோணம் | 9751190400 |
| புதுக்கோட்டை | 6384087300 |
| மணப்பாறை | 8754125004 |
| குளித்தலை | 9791849300 |
| பெரம்பலூர் | 7395836767 |
| அரியலூர் | 9363599300 |
| மன்னார்குடி | 9894622400 |
| பட்டுக்கோட்டை | 8438621400 |
| துறையூர் | 7548842300 |
| திருப்பூர் | 8870320300 |
| தூத்துக்குடி | 8870681300 |
| திருநெல்வேலி | 9790370300 |
| அரூர் | 8754390300 |

| | |
|---|---|
| தென்காசி | 9597587300 |
| சங்கரன்கோவில் | 9942016008 |
| இராஜபாளையம் | 9159055200 |
| ஆலங்குளம் | 9940845300 |
| வள்ளியூர் | 9940941300 |
| விளாத்திக்குளம் | 9791610300 |
| கோவில்பட்டி | 8754888300 |
| அம்பை | 8807604300 |
| வாசுதேவநல்லூர் | 9047988300 |
| விருதுநகர் | 9597845300 |
| நாகர்கோவில் | 9790509300 |
| கடையம் | 8148110300 |
| சுரண்டை | 8925786900 |
| புளியங்குடி | 8870424300 |

| | |
|---|---|
| ஈரோடு | 7548826300 |
| அவிநாசி | 9952432300 |
| கரூர் | 9159054300 |
| நாமக்கல் | 8870836300 |
| பொள்ளாச்சி | 8220877300 |
| தாராபுரம் | 8778934800 |
| கோபிச்செட்டிபாளையம் | 6382122300 |
| கோயம்புத்தூர் | 9629291300 |

TAF ice

Coaching for :
UPSC BANKING
SSC RRB

TENKASI NEYVELI MADURAI